வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu







Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 01.01.2026 வியாழக்கிழமை இதழ் : 366 பக்கங்கள் : 08

# தையிட்டி விகாரை அமைவிடம் தவிர்ந்த ஏனைய காணிகளை விடுவிக்க இணக்கம்

## 4 கட்டங்களில் தீர்வை எட்டவும் யோசனை மாவட்ட செயலருடனான சந்திப்பில் ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜன. 01

தையிட்டி விகாரை அமைந்திருக்கும் இடம் தவிர்ந்த, அதைச் சூழவுள்ள ஏனைய காணிகளை கட்டம் கட்டமாக விடுவிக்கும் யோசனைக்கு காணி உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதை அடுத்து, குறித்த காணிகளை விடுவிப்பதற்கான யோசனை அடங்கிய வரைவொன்று மாவட்ட செயலாளரினால் துறைசார் தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் ம. பிரதீபன் மற்றும் காணி உரிமையாளர்களுக்கு இடையே நேற்று நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக காணி உரிமையாகர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்திய காணி உரிமையாளர்கள் தெரிவிக்கையில்-

தையிட்டி விகாரை அமைந்துள்ள 07




அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்! ஈழநாடு

# அடுத்த வாரம் முதல் கல்வி சீர்திருத்தம் அரசின் தீர்மானத்துக்கு கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஜன. 01

கல்வி சீர்திருத்தங்களை அடுத்த வாரம் முதல் அமல்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள முடிவுக்கு எதிராக ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வித்துறை நிபுணர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். 07

# மாகாண சபை தேர்தலை நடத்த விசேட குழு; 6ஆம் திகதி சபைக்கு வருகின்றது பிரேரணை

கொழும்பு, ஜன. 01

மாகாண சபைத் தேர்தலை எந்த தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைக்க "நாடாளுமன்ற விசேட குழு" ஒன்றை நியமிப்பதற்கான பிரேரணை, எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக இழுபறியில் உள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான ஒரு முக்கிய நகர்வாக இது கருதப்படுகிறது.

சபாநாயகர் தலைமையில் நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, 2026 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், 07

# சகலரும் ஒற்றுமையுடன் கைகோர்த்து சிறந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம்!



## புத்தாண்டு வாழ்த்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 01

"நாம் முன்பு இருந்ததை விட சிறந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று உறுதியாக நம்புகின்றோம். இதற்கான திட்டத்தில் அசைக்க முடியாத உறுதியுடனும் நம்பிக்கையுடனும் சகோதரத்துவத்துடன் கைகோர்க்க அனைவருக்கும் நான் அழைப்பு விடுகின்றேன்." - இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்துள்ள 07

# ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை!

## அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஜன. 01

ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொது பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஊடக சுதந்திரம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் முன்வைத்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து விளக்கம் அளித்த பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, அரசாங்கத்துக்கு ஊடகங்களை அடக்குவதற்கோ, ஊடக சுதந்திரத்தை ஒடுக்குவதற்கோ எந்த நோக்கமும் இல்லை என வலியுறுத்தினார். 07

# சர்வதேச தரநிலைகளுக்கு அமைவான மருந்து தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம்!

## இந்தியா உதவவேண்டும் என கோரிக்கை

கொழும்பு, ஜன. 01

சர்வதேச தரநிலைகளுக்கு அமைவான தேசிய மருந்து ஒழுங்குமுறை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் ஒன்றை இலங்கையில் நிறுவ இந்தியாவின் உதவியை மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் நிபுணர்களின் மருத்துவர் சங்கம் கோரியுள்ளது.

இந்த சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி சமல் சஞ்சீவ, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தில், உலக சுகாதார அமைப்பு மற்றும் சர்வதேச தரநிலையமைப்பின் 07

# நாகொடை வைத்தியசாலைக்குள் சிறைக்கைதி மீது துப்பாக்கிச் சூடு!

## நேற்றுக் காலை பரபரப்பு சம்பவம்

கொழும்பு, ஜன. 01

களுத்துறை, நாகொடை போதனா வைத்தியசாலைக்குள் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர், "ராஜவத்த சதுவா" என அழைக்கப்படும் நாராயணகே திலீப் சதுரங்க எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இவர் கடந்த டிசெம்பர் 13 ஆம் திகதி போதைப்பொருள் குற்றச்சாட்டுத் தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸாரால் கைது 07

# அரசமைப்பு பேரவை சுயாதீனமாக இயங்க அரசு இடமளிக்கவேண்டும்!



## தயாசிறி ஜயசேகர கோரிக்கை

கொழும்பு, ஜன. 01

அரசியலமைப்பு பேரவையின் சுயாதீனத்தன்மைக்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைக்கு இடமளிக்க முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசியலமைப்பு பேரவையென்பது 07

# நீதித்துறையில் பதவி உயர்வுகளை சேவை மூப்பு முறையில் வழங்குக!

## சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 01

நீதித்துறையில் எதிர்கால பதவி உயர்வுகள் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறைக்கு இணங்க, சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீதித்துறையில் பதவி உயர்வுகள் பாரம்பரியமாக சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், அண்மைய காலங்களில் இந்த நடைமுறையிலிருந்து விலகிய சில சந்தர்ப்பங்கள் 07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கை நோக்கி பயணிப்போம்!

# புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



யாழ்ப்பாணம், ஜன. 01

பேரிடரால் ஏற்பட்ட இழப்புகளில் இருந்து மீண்டெழுவதற்கு நாம் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். இருந்த நிலையைவிட சிறந்த நிலைக்கு செல்வோம். அதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவரது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில்-

ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் இந்த இனிய தருணத்தில், அனைவருக்கும் என் இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் துறை நாட்டின் பொருளாதாரத்திற்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் முக்கிய பங்காற்றுகிறது.

மீனவர்கள், நீரியல் விவசாயிகள் மற்றும் இந்தத் துறையுடன் தொடர்புடைய அனைவரின் உழைப்பும் அர்ப்பணிப்பும் எமது நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்குகின்றது.

எனவே, வரவிருக்கும் புதிய ஆண்டு பாதுகாப்பான வாழ்வாதாரம், நிலையான அபிவிருத்தி மற்றும் அனைவருக்கும் நலன் நிறைந்த எதிர்காலம் ஆகியவற்றை கொண்டுவரும் வருடமாக அமைய வேண்டும் என மனப்பூர்வமாக வேண்டுகிறேன்.

இந்தப் புத்தாண்டில் அமைதி, ஒற்றுமை, செழிப்பு மற்றும் நம்பிக்கை உங்கள் இல்லங்களையும் இதயங்களையும் நிரப்பட்டும்.

பேரிடரால் எமக்கு இழப்பு ஏற்பட்டதுதான். இந்நிலையில் இருந்து நிச்சயம் மீண்டெழுவோம். மீண்டெழுதல் என்பது விழுந்த நிலையில் இருந்து எழுதல் அல்ல. இருந்த நிலையைவிட சிறந்த நிலைக்கு செல்வதாகும். அந்த இலக்கை நோக்கி பயணிப்போம்-என்றுள்ளது. (அ)

# வடக்கு மாகாண மக்களுக்கு இருள் நீங்கி ஒளி பிறக்கட்டும்

## ஆளுநர் புத்தாண்டு வாழ்த்து



யாழ்ப்பாணம், ஜன. 01

மலர்கின்ற 2026 ஆம் ஆண்டானது, வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் இருள் நீங்கி, ஒளி பிறக்கும் ஒரு நம்பிக்கை ஆண்டாக அமைய எனது உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் இயற்கைப் பேரிடரால் நாம் இழந்தவை ஏராளம். ஆனால், "பாதிக்கப்பட்ட வாழ்க்கையைத் பழைய நிலைக்குத் திருப்புவது மட்டும் எமது இலக்கல்ல. அது முன்னரை விடப் பல மடங்கு சிறந்ததாக, வளமானதாக மாற வேண்டும்" என்பதே எமது புத்தாண்டின் தாரக மந்திரமாகும் என வடக்கு மாகான ஆளுநர் என்.வேதநாயகன் தனது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

இடிந்துபோன சுவர்களை மட்டுமல்ல, மக்களின் உடைந்த மனங்களையும் நம்பிக்கையால் கட்டி எழுப்புவோம். நாம் இழந்ததை விட, இனி அடையப் போகும் உயரம் பெரிதாக இருக்க வேண்டும்.

இந்த இலக்கை அடைவதற்கு, மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களின் தலைமையிலான அரசாங்கம் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. கடந்த 2025ஆம் ஆண்டில் மாகாணத்தின் மீளெழுச்சிக்கு அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அரசின் கரங்களைப் பற்றி, எமது மக்களின் வாழ்வாதாரத்தை இந்த ஆண்டில் புதிய தளத்துக்குக் கொண்டு செல்வோம்.

நிர்வாக ரீதியாகப் புதிய தோர் ஆண்டைத் தொடங்கும் இவ்வேளையில், எமது அரச அதிகாரிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:

"உங்கள் மேசையில் தேங்கிக் கிடக்கும் ஒவ்வொரு கோப்பும் வெறும் காகிதக் கட்டுகள் அல்ல. ஒவ்வொன்றும் ஒரு ஏழைத் தாயின் கண்ணீர், ஒரு தந்தையின் பெருமூச்சு, ஒரு இளைஞனின் எதிர்காலம் என்பதை மறவாதீர்கள். நீங்கள் புத்தாண்டில் எடுக்கும் உறுதியுரை வெறும் சடங்கல்ல. அது மக்களின் நம்பிக்கைக்குச் செய்யும் சத்தியம்.

சட்டதிட்டங்களுக்குள் மனிதாபிமானத்தைப் புகுத்தி, அந்த மக்களின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக நீங்கள் மாற வேண்டும்."

அரசும், அதிகாரிகளும், மக்களும் ஓரணியில் திரண்டால், எமது வடக்கு மாகாணம் முன்னுதாரணமான வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். பிறக்கின்ற 2026, மாற்றங்களுக்கான ஆண்டாக மட்டுமல்ல, ஏற்றங்களுக்கான ஆண்டாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்-என்று கூறியுள்ளார். (அ)

## கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தத்தை குறைக்கும் செயற்பாடு முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஜன. 01

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களை குறைக்கும் செயற்பாட்டில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் நேற்று வெள்ள நீர் குறுக்கறுத்து பாயும் கழிவு வாய்க்கால்களை துப்பரவு செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது. காணிக்கு பொறுப்பான மேலதிக அரசாங்கதிபர் அஜிதா பிரதீபன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் மு.அழகக்கோன், கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.பிரகாஸ் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் தலைமையில் துப்பரவு பணி முன்னெடுக்கப்பட்டது. (அ)

# தமிழரசுவின் ஒன்றுகூடல்



கிளிநொச்சி, ஜன. 01

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் வருடாந்த ஒன்று கூடலும் ஒளி விழா நிகழ்வும், கிளிநொச்சி கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை கி.ஜெயக்குமார் கலந்து கொண்டு நத்தார் வழிபாட்டினை நடாத்தினார்.

நிகழ்வில் மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் வட மாகாண கல்வியமைச்சர், கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (அ)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு!

கிளிநொச்சி, ஜன. 01

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் மீது பொலிஸார் ஐந்து தடவை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நிலையில் டிப்பர் வாகனம் வீதியில் மணலை கொட்டியபடி தப்பியோடியுள்ளது.

சட்டவிரோத மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தை பொலிஸார் மறிக்க முற்பட்டபோது நிறுத்தாது குறித்த வாகனம் பயணித்துள்ளது.

பரவிப்பாஞ்சான் வீதியூடாக செல்ல முற்பட்ட குறித்த டிப்பர் வாகனத்தை துரத்திச்சென்று பொலிஸாரால் ஐந்து தடவைகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் டிப்பர் வாகனம் வீதியில் மணலை கொட்டியபடி தப்பிச்சென்றுள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## வடக்கு, கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜன. 01

வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய, வடமேற்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் இன்று சில நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, வடமேற்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீட்டருக்கும் அதிக மழை பெய்யும் என கூறப்படுகிறது.

பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை நேரங்களில் மூடுபனியுடன் கூடிய வானிலையும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் இடியுடன் கூடிய மழை பெய்யும்போது தற்காலிகமாக பலத்த காற்றும் வீசும். இதன்போது ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் மன்னார் முதல் புத்தளம் வழியாக கொழும்பு வரையிலும் திருகோணமலை முதல் மட்டக்களப்பு வழியாக அம்பாந்தோட்டை வரையிலும் உள்ள கடற்கரைப் பகுதிகளில் பல இடங்களில் மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் முதல் கொழும்பு வழியாக காலி வரையான கடற்கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்கும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் புத்தளம் முதல் கொழும்பு வழியாக காலி வரை ஓரளவு கடல் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# குடிதண்ணீர் விநியோகத்தில் புறக்கணிக்கப்பட்ட காரைநகர்

## தவிசாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 01

காரைநகரில் எல்லா பகுதிகளிலும் இன்னமும் குடிதண்ணீர் வழங்கல் குழாய்கள் புதைக்கப்படவில்லை. பல பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காரைநகர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டமானது நேற்று முன் தினம் நடைபெற்றது. அதில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

காரைநகரில் கரையோர பகுதிகளுக்கே அதிகளவான நீர் தேவை உள்ளது. ஆனால் அங்கே பிரதான குழாய்கள் பொருத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து உரிய அதிகாரி பதிலளிக்கையில்,

நீர்த்தாங்கி வரைக்கும் தண்ணீர் வந்துவிட்டது. குழாய் இணைப்புகளை முடித்த பின்னர் மார்ச் முதல் வாரத்தில் குடிதண்ணீரை வழங்குவோம். அத்துடன் பொது மக்களுக்கு ஏற்படும் சிரமத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் பிரதேச செயலகத்திடம் விண்ணப்ப படிவங்களை விநியோகித்துள்ளோம்.

அண்ணளவாக 3,700 குடும்பங்கள் இங்கே இருந்தாலும் 500 குடும்பங்கள் அளவிலேயே இங்கே விண்ணப்பங்களை மேற்கொண்டுள்ளன. அத்துடன் காரைநகர் பிரதேச மக்கள் 38 வீத மானியத்தில், 13 ஆயிரத்து 875 ரூபாவை செலுத்தி இணைப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

பெப்ரவரி மாதத்தில் நடமாடும் சேவையை இங்கே மேற்கொண்டு, இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கான வேலையை செய்கின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
01.01.2026 வியாழக்கிழமை

விசுவாவசு வருடம், மார்கழி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# 2026 தேர்தல் ஆண்டா - இல்லை?

நாட்டின் புத்தாண்டு வாழ்த்துக்கள். நாள் செல்லும் செல்லும் நாம் எங்கு செல்வோமோ - என்பது போல் ஆண்டுகள் மட்டும்தான் நம்மை விட்டு சென்று கொண்டிருக்கின்றது. "சமஷ்டி", "தனிநாடு" கோசங்களும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட எத்தனையோ அரசியல் நகர்வுகளும் ஏராளம் ஏராளம். தனிநாட்டு அரசியலுக்காக தியாகிகள் என்றும் துரோகிகள் என்றும் உயிர்களை இழந்தவர்கள் எண்ணிக்கை என்ன என்பதும் இன்றைய தலைமுறைக்கு தெரியாது. ஏனெனில் அந்தளவிற்கு கொலைகள் ஒரு அரசியல் ஆயுதமாக கொண்டாடப்பட்ட சமூகமொன்றில்தான் நாம் இப்போதும் உரிமைகளுக்கான குரல்களுடன் இருப்பதாக கூறிக்கொண்டிருக்கின்றோம்.

திரும்பிப் பார்த்தால் அரசியல் அடைவுகள் எதுவுமின்றியே காலம் கழிந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழர் அரசியல் போராட்டத்தின் அடையாளமாக எஞ்சியிருப்பது, மாகாண சபை முறைமை ஒன்றுதான் ஆனால் அதுவும் எட்டு வருடங்களாக பெயரளவில் மட்டும்தான் இருக்கின்றது. அரசியலமைப்பில் இருப்பவற்றையே அமுல்படுத்தமாட்டோம் என்று கூறப்படும் அரசியல் சூழலில், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை எந்தப் பலம் கொண்டு பெறுவது? எந்த வெளித்தரப்பு அதன் பலத்தை பிரயோகித்து தமிழர்களுக்கு உரிமை பெற்றுத்தரும்? நேற்றுப் போல்தான் இன்றும் - இந்தக்கேள்விகளுக்கு பதில் இல்லை.

இன்றைய ஈழத் தமிழர் அரசியல் என்பது இயலாமையின் அடையாளம் மட்டுமே. பேச்சளவில் இருக்கின்ற எந்தவொரு விடயங்களுக்கும் செயல்வடிவம் கொடுக்கக் கூடிய அல்லது அதற்காக வெளித் தரப்புக்களின் ஆதரவை பெறும் வல்லமையுள்ள ஒரு மக்கள் கூட்டமாக ஈழத் தமிழர் சமூகம் இல்லை என்னும் உண்மை கசப்பானதுதான் எனினும் அதனை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

நீதி கோரும் ஈழத் தமிழர் அரசியலின் பலவீனத்தை நிருபித்த ஆண்டாக 2025 அமைந்திருந்தது. ஒரு வகையில் தோல்வியை அடையாளப்படுத்திய ஆண்டாகவும் அதனை குறித்துக் கொள்ளலாம். இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் உள்ளக பொறிமுறையை வலிறுத்தியதாக குறிப்பிட்டிருந்தார். அவ்வாறாயின் பதினாறு ஆண்டுகளாக ஈழத் தமிழர் அரசியல் தரப்புக்கள் மேற்கொண்ட அரசியல் லொபியின் விளைவு என்ன? பூச்சியம்.

மாற்றமடைந்து வரும் உலக அரசியல் சூழலில் ஈழத் தமிழர்கள் தொடர்பில் கரிசனை கொள்ளக் கூடிய அரசியல் சூழல் துளியளவும் இல்லை. இந்த நிலையில் தமிழர் அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ளும் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

இப்படியேரூபவ் சில கோசங்களை உச்சரித்தவாறு காலத்தை விரயம் செய்யப் போகின்றனவா அல்லது இருப்பதைக் கொண்டு முன்னோக்கி பயணிக்கப் போகின்றனவா? இருப்பது என்ன? இந்த ஆண்டும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை என்றால் அதன் பின்னர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வாய்பில்லை. அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர்தான் அதற்கான வாய்ப்புண்டு. ஆனால் பத்து ஆண்டுகளுக்கு மேல் மாகாண சபைத் தேர்தல் இல்லாமலேயே மாகாண சபை நிர்வாகம் இடம்பெற்றிருக்கின்றது என்னும் போது, மாகாண சபை முறைமை தேவைதானா என்னும் கேள்வியே மேலேழும்.

இதனைக் கடந்து இந்த ஆண்டாவது தேர்தல் இடம்பெற வேண்டுமாயின் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு மாகாண சபைத் தேர்தல் விகாரத்தை ஒரு ஜனநாயக கோரிக்கைக்கான மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும். இரண்டு மாதங்களில் நிலைமைகள் தெளிவாகத் தெரியும் அதாவது, தேர்தலை நடத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருகின்றதா அல்லது இல்லையா என்பதை தெளிவாகக் காணலாம்.

அதன் பின்னர் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு இந்த விடயத்தை மக்கள் மயப்படுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலுக்கான குரல் வடக்கு கிழக்கிலிருந்து திரட்சிபெறும் போது, இந்த விடயத்தில் புதுடில்லியின் கவனத்தை ஈர்ப்பதும் இலகுவாகும். அழுகிற பிள்ளைதான் பால் குடிக்கும் என்பது போல் தேவையுள்ள தமிழ் தரப்புக்கள் தங்களுடைய கேரிக்கையை ஒன்றுபட்டு வெளிப்படுத்தாத போது புதுடில்லியின் குரலும் மெல்லியதாகவே இருக்கும்.

# கொழும்பு மாநகர சபையில் ஊழல் விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 01

கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றவை என்று கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

2010 முதல் 2025 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பிலேயே இவ்வாறு விசாரணை நடத்தி, அறிக்கை பெறுவதற்காக மூவரடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி பியசேன ரணசிஹ்க தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ். விக்கிரமசிங்ஹ, கணக்காய்வாளர் சேவை அதிகாரி ஏக்க நாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ)

# டாக்கா சென்றார் அமைச்சர் விஜித

கொழும்பு, ஜன. 01

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று பங்களாதேஷின் டாக்கா நகருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் காலிதா ஜியாவின் இறுதிச் சடங்கில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார். (ஐ)

# காலி மாநகர சபையில் குழப்பம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது

கொழும்பு, ஜன. 01

காலி மாநகர சபையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, அவர்கள்மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

காலி மாநகர சபையின் விசேட பொதுச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கடந்த வாரம் நடைபெற்ற பாதீட்டு திட்ட வாக்கெடுப்பு சட்ட விரோதமானது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சுமத்தி சபை நடவடிக்கைகளை குழப்பினர் என்று கூறப்படுகிறது.

இதன்போது சபையின் செயலாளர் மற்றும் ஊழியர்கள் தமது கடமையை செய்ய விடாது தடுத்ததுடன், அவர்கள் மீது தண்ணீர் போத்தல்களை வீசியும் அச்சுறுத்தியும் செயல்பட்டனர்.

சபையில் நிலவிய அமைதியற்ற சூழலைத் தொடர்ந்து மாநகர முதல்வர் சுனில் காமகே சபையை ஒத்திவைத்தார்.

தொடர்ந்து அவர் அளித்த பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமைய எதிர்க்கட்சியை சேர்ந்த பெண் உறுப்பினர் ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# நன்னடத்தை பிரிவின் பொறுப்பிலுள்ள 3,000 சிறார்க்கு பிறப்பு சான்றிதழ் இல்லை

கொழும்பு, ஜன. 01

நீதிமன்றச் செயல்முறைகள் மூலம் நன்னடத்தை பிரிவின் பொறுப்பில் உள்ள 16 வயதுக்கு உட்பட்ட சுமார் 3 ஆயிரம் சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கவனிப்பு இல்லாமை, அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அந்தச் சிறுவர்களைப் பாடசாலைக் கல்வியில் இணைப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

போதைப்பொருள் பழக்கம், திருட்டு, கொலை, பாதாள உலகச் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள், கைவிடப்பட்ட சிறுவர்கள் மற்றும் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகி நீதிமன்ற உத்தரவின் பேரில் நன்னடத்தைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் இதில் அடங்குவர்.

பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத சிறுவர்களுக்கு, "ஊகிக்கப்பட்ட வயது வரம்பின்" அடிப்படையில் பிறப்புச் சான்றிதழ்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில், தந்தை அல்லது தாயின் பெயருக்குப் பதிலாக அந்த நன்னடத்தை பராமரிப்பு நிலையம் அமைந்துள்ள மாகாணத்தின் "மாகாண நன்னடத்தை ஆணையாளரின் "பெயரைப் பயன்படுத்துவது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களம் ஊடாக இந்தச் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது 46 அரச நன்னடத்தை பராமரிப்பு நிலையங்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் 308 நிலையங்களிலும் மொத்தமாக 9 ஆயிரத்து 191 இளையோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**இடபம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். குடும்பத்தாருடன் இணக்கமாக செல்லவும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உயர் அதிகாரிகளுடன் மோதல்கள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டும்.

**கடகம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரம் தழைக்கும். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**சிம்மம்**

எதையும் தாங்கும் மன பலம் கிடைக்கும். உடன்பிறந்தவள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கன்னி**

கணவன்-மனைக்குள் நெருக்கம் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் விலகும்.

**துலாம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் பனிப்போர் வந்து நீங்கும்.

**விருட்சிகம்**

சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**தனுசு**

பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**மகரம்**

குடும்பத்தில் அடிப்படை வசதியை மேம்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புது தொழில் தொடங்குவீர்கள். சலுகைகள் கிடைக்கும். புதுமையான நாள்.

**கும்பம்**

பழைய இனிய சம்பவங்களை நினைத்து மகிழ்வீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். அலைச்சல் அதிகரிக்கும் நாள்.

**மீனம்**

குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

# உறுப்பினர்களுக்கு அழைப்பில்லையேல் அபிவிருத்தி கூட்டங்களை புறக்கணிப்போம்!

## நல்லூர் பிரதேச சபை ஒரு மனதாக தீர்மானம்

*யாழ்ப்பாணம், ஜன. 01*

"நல்லூர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்காவிடின் அந்தக் கூட்டங்களை முற்றாகப் புறக்கணிப்பது", என்று நல்லூர் பிரதேச சபையில் ஒரு மனதாக தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தவிசாளர் ம. மயூரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, உரையாற்றிய தவிசாளர், நல்லூர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தவிசாளர், உபதவிசாளர் ஆகியோருடன் வேறு கட்சிகளின் இரு உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சி சார்பில் பிரதிநிதிகளை அழைத்து பிரச்னைகளைக் கேட்பதற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒன்றும் கட்சிகளின் செயல்பாடுகள் தொடர்பான கூட்டம் அல்ல. அது மக்களின் குறை, நிறைகளைத் தீர்க்கின்ற - பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான கூட்டம். எனவே அதில் மக்களைப் பிரநிதித்துவம் செய்யும் சகல உறுப்பினர்களும் பங்கேற்பது அவசியம். எனவே நல்லூர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு கட்சி சார்பில் அழைக்காது. சகல உறுப்பினர்களையும் அனுமதிக்க வேண்டும் என்று கூறி அதனை பிரேரணையாக முன்வைத்தார்.

சபையில் இருந்த சகல உறுப்பினர்களும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்தனர். (ஐ-05)

# வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் ஒளிவிழா நேற்று பூநகரி பள்ளிக்குடாவில்!

*கிளிநொச்சி, ஜன.01*

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் 2025ஆம் ஆண்டுக்கான ஒளி விழா நேற்று கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.தர்சினி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக, வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் பங்கேற்றார்.

இந்த நிகழ்வில் பூநகரி பிரதேச செயலாளர் வே. ஆயகுலன், அருட்தந்தையர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் பங்கேற்றனர்.

இதன்போது, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு அருகே இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 3 இந்திய கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு, வடக்கு கடற்படை கட்டளைப் பிரிவினர் நெடுந்தீவுக்கு அருகில் உள்ள உள்ளூர் கடல் எல்லைக்குள் விசேட கண்காணிப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு இந்தியக் கடற்றொழில் படகுடன் அதிலிருந்த மூன்று (03) இந்திய கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட இந்தியக் கடற்றொழில் படகு மற்றும் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மைலடி மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# நல்லூர் சிவன் ஆலயத்தில் பிட்டு திருவிழா சிறப்புற்றது

*யாழ்ப்பாணம், ஜன. 01*

திருவெம்பாவை திருவிழாவின் பிட்டு திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற்றது.

சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்து வைகையின் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தியதாக நம்பிக்கை நிலவுகிறது. இதனை பிரதிபலிக்கும் வகையில் இந்த பிட்டு திருவிழா திருவெம்பாவை திருவிழாவில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதில், ஏராளமான அடியவர்கள் பங்கேற்றனர். (ஐ)



# 3 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது!

*யாழ்ப்பாணம், டிசெ. 01*

நெடுந்தீவு கடல்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த 3 இந்திய மீனவர்களை கடற்படை கைது செய்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு வடக்கு கடற்படை கட்டளைப் பிரிவினர் மேற்கொண்ட கண்காணிப்பின்போது இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்களின் படகும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யபட்டவர்கள் மயிலிட்டி நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# புங்குடுதீவிலிருந்து மாட்டு இறைச்சியை சூட்சுமமாக கடத்திய சந்தேகநபர் கைது

*யாழ்ப்பாணம், ஜன. 01*

மாட்டை பிடித்து இறைச்சியாக்கி சூச்சுமமாக யாழ்ப்பாணம் நகருக்குக் கொண்டு வந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மீன் கொண்டு செல்லப்படும் பெட்டியில் மாட்டு இறைச்சியை மறைத்து எடுத்து வந்தபோது வேலணை - அராலி சந்தியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு புங்குடுதீவிலிருந்து 35 கிலோ மாட்டு இறைச்சியுடன் மீன் வியாபாரி போன்று வந்துள்ளார்.

அவரில் சந்தேகமடைந்த பொலிஸார் மறித்துச் சோதனையிட்டனர். இதன்போது அவர் மாட்டு இறைச்சியை கடத்தியமை தெரிய வந்தது. இதைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையில் பதவி உயர்வுகளை பாரம்பரிய அடிப்படையில் வழங்குக

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜன. 01

நீதித்துறையில் எதிர்கால பதவி உயர்வுகள் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறைக்கு இணங்க, சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீதித்துறையில் பதவி உயர்வுகள் பாரம்பரியமாக சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டு வந்தன. ஆனால், அண்மைய காலங்களில் இந்த நடைமுறையிலிருந்து விலகிய சில சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

திறமையின் அடிப்படையில் சிரேஷ்டத்துவத்தைப் புறக்கணிப்பதென்றால், அதற்கான தெளிவான அல்லது வெளிப்படையான வழிகாட்டல்கள் தற்போது இல்லை. அத்துடன் நீதித்துறைமீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும், நீதி நிர்வாகம் பாரபட்சமற்ற முறையில் நடைபெறுவதை உறுதி செய்வதற்கும் வெளிப்படையான பதவி உயர்வு முறை மிகவும் அவசியம்.

மேலும், திறமையை மதிப்பீடு செய்வதற்கான முறையான மற்றும் வெளிப்படையான வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்படும் வரை, சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையிலேயே பதவி உயர்வுகளை வழங்குமாறு சங்கம் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் அரசமைப்புச் சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# சீன கம்யூனிஸ்ட் கட்சியால் 4.4 கோடி ரூபாய் நிவாரணம்

கொழும்பு, ஜன. 01

டித்வா சூறாவளிக்குப் பின்னர் சீனாவின் ஆதரவை மேலும் வலுப்படுத்தும் வகையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச துறை இலங்கைக்கு 10 இலட்சம் சீன யுவான்களை (சுமார் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய்) பெறுமதியான நிவாரண பொருட்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

இந்தத் தகவலை உறுதிபடுத்திய கொழும்பில் உள்ள சீனத் தூதரகம், இலங்கை மக்களுக்கான அன்பும் மற்றும் அக்கறையின் ஒரு பகுதியாக இந்த நன்கொடையை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இயற்கை பேரழிவுக்குப் பதிலளிக்கும் விதமாக தொடங்கப்பட்ட "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்" முயற்சியை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்திய வாங் ஜூன் ஷெங் தலைமையிலான சீன கம்யூனிஸ்ட் கட்சி தூதுக் குழுவின் அண்மைய இலங்கை வருகையை முன்னிட்டு இந்தத் உதவித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# துப்பாக்கி சூட்டில் சிறுமி படுகாயம்

கொழும்பு, ஜன. 01

வீடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 16 வயது சிறுமி ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொழும்பு கொஹுவலை, போதியவத்தை பகுதியில் உள்ள சரணங்கர வீதியில் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் வீட்டுக்கு அருகில் இருந்த வீட்டையே இலக்கு வைத்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அருகிலுள்ள வீட்டில் இருந்த 16 வயது சிறுமி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

(ஐ)

# மலசலகூட குழிக்குள் விழுந்து சிறுவன் பலி

கொழும்பு, ஜன. 01

மலசலகூடத்துக்கு வெட்டப்பட்ட குழியில் விழுந்து 4 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம் - ஆனமடுவ பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவனின் தாய், வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது சிறுவனை அவரது பாட்டியிடம் ஒப்படைத்துள்ளார். பாட்டியின் வீட்டிலிருந்து மீண்டும் தனது வீட்டுக்கு திரும்பி வந்துகொண்டிருந்த போதே, மழையால் நீர் நிறைந்திருந்த மலசலகூட குழிக்குள் சிறுவன் தவறி விழுந்துள்ளார்.

சிறுவன் நீண்ட நேரமாகியும் வீட்டுக்கு வராததைக் கண்டு தேடியபோது, குழிக்குள் விழுந்து நீரில் மூழ்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டார்.

உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# ஐஸ் போதைப்பொருளை பாவிப்போர் தொகை உயர்வு

கொழும்பு, ஜன. 01

நாட்டில் ஐஸ் போதைப் பொருள் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் மட்டும் ஐஸ் போதைக்கு அடிமையான 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர் என்று அதன் உதவி இயக்குநர் தமரா தர்ஷன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மாவட்டங்களில் போதைப்பொருள் பயன்பாடு அதிகமாக இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட புள்ளிவிவரங்களின் படி மெத்தம்பேட்டமைன் எனப்படும் ஐஸ் போதைப்பொருளின் படிப்படியான அதிகரிப்பை அடையாளம் காண முடியும். ஹெரோயின் மற்றும் கஞ்சா எனப்படும் இரண்டு போதைப் பொருட்களுடன் ஒப்பிடும்போது, ஐஸ் போதைப்பொருளின் பயன்பாடு வேகமாக அதிகரித்து வருகிறது.

20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் போதைப் பொருள் பயன்படுத்துவதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் என்றும் கூறினார்.

(ஐ)

# பேரீச்சம் பழத்துக்கு வரி விலக்கு அளிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜன. 01

புனித ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக அன்பளிப்பாகப் பெறப்படும் பேரீச்சம்பழங்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தூதரகங்கள், அமைப்புகள் மற்றும் தனிநபர்களிடமிருந்து ஆண்டுதோறும் அன்பளிப்பாக அல்லது நன்கொடையாகப் பெறப்படும் பேரீச்சம்பழங்களுக்கு இந்தச் சலுகை பொருந்தும்.

இவ்வாறான இறக்குமதிகள் வெளிநாட்டுச் செலாவணி அடிப்படையிலன்றி மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆண்டு ரமழான் நோன்பு காலம் 2026 பெப்ரவரி 19 ஆம் திகதி ஆரம்பித்து, மார்ச் 21 ஆம் திகதி வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

(ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட பாடசாலைகளை தெரிந்து ஆசிரியர் விடுதி அமைக்க முடிவு!

கொழும்பு, ஜன. 01

தெரிவு செய்யப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகளை நிர்மாணிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல், தெற்கு, வடமேல் மாகாணங்களிலுள்ள தேயிலை, இறப்பர் தோட்டங்களில் 864 பாடசாலைகள் இயங்குகின்றன.

இந்தப் பாடசாலைகளில் அதிகமானவை நகரங்களிலிருந்து தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ளமையால், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு பாடசாலைகளுக்குச் செல்வதற்குச் சிரமங்கள் காணப்படுகின்றன.

இந்தப் பாடசாலைகளில் இரண்டாம் நிலைக் கல்வி வகுப்புக்களில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையால் க. பொ. த சாதாரணதர பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை போன்ற தேசிய பரீட்சைகளில் அப்பாடசாலைகளின் மொத்தத் தேர்ச்சி ஏனைய அரச பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் இருக்கின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலைமை பெரும்பாலும் இளைஞர் தலைமுறையினர் திறனற்ற தொழிலாளர்களாக உருவாவதற்கு காரணமாக அமைந்துள்ளது. அதனால், தோட்டப் பாடசாலைகளில் மனிதவளம் மற்றும் பௌதிக வளங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயத் தேவை காணப்படுகிறது.

அதற்கமைய, ஆசிரியர் பற்றாக்குறையைக் குறைத்து இப்பாடசாலைகளில் மனித வளங்களை அதிகரிப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில், அந்தந்த மாகாணங்களில் ஆசிரியர் விடுதி தேவைகள் காணப்படுகின்ற 14 தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டங்களை அந்தந்த மாகாண சபைகள் மூலமாக அமுல்படுத்த கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)



# மட்டக்களப்பு குளங்களில் முதலைகள் நடமாட்டம்!

மட்டக்களப்பு, ஜன. 01

மட்டக்களப்பு வாவியை அண்மித்துள்ள களுதாவளை, களுவாஞ்சிகுடி, தேற்றாத்தீவு, மகிழூர் உள்ளிட்ட பல கிராமிய குளங்கள் நிரம்பியுள்ளன. இதனால், மட்டக்களப்பு வாவியிலுள்ள முதலைகள் கிராமங்களிலுள்ள குளங்களுக்குள் வந்துள்ளன.

இவ்வாறு குளங்களில் இருக்கும் முதலைகள் இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே, இரவு வேளைகளில் அந்தப் பகுதிகளில் நடமாடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# குரங்கு தாக்கி காயமடைந்த சிறுவன் மருத்துவமனையில்!

திருகோணமலை, ஜன. 01

சிறுவன் ஒருவர் குரங்கு தாக்கியதில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவில் உள்ள 98ஆம் கட்டை அரபா நகரை சேர்ந்த 12 வயது சிறுவனே இவ்வாறு குரங்கால் காயமடைந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது குறித்த சிறுவன் மாலை நேரத்தில் பள்ளிவாசலுக்கு மதக் கடமையை நிறைவேற்ற தொழுகைக்காக சென்ற வேளையே குரங்கு தாக்கியதாகக் கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக அந்தப் பகுதியில் குறித்த குரங்கு தொடர்ச்சியாக மக்களுக்கு தொல்லை கொடுத்து வருவதால் வனஜீவராசிகள் திணைக்களம் பிடித்துச் செல்ல வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தே. ம. சக்தி உறுப்பினர் விபத்தில் பலி!

கொழும்பு, ஜன. 01

மோட்டார் சைக்கிளும் தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற வேட்பாளரான முன்னாள் பிரிகேடியர் எச். எம். சரத் விஜேசேன உயிரிழந்தார். அவருடன், பயணித்த முன்னாள் கேணல் தர அதிகாரி படுகாயமடைந்துள்ளார்.

இருவரும் வர்த்தக நடவடிக்கை ஒன்றுக்காக காலி பிரதேசத்துக்கு மோட்டார் சைக்கிளில் களுத்துறை - பண்டாரகம - கெஸ்பேவ வீதியில் சென்று கொண்டிருந்தனர். அப்போதே தனியார் பேருந்துடன் மோதி விபத்து இடம்பெற்றது.

விபத்து தொடர்பில் பேருந்து சாரதியான அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போரதீவுப்பற்று பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா!



மட்டக்களப்பு, ஜன. 01

மட்டக்களப்பு - மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை, போரதீவுப்பற்று பிரதேச சபை, பொது நூலகங்கள் இணைந்து நடத்திய தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் வெல்லாவெளி கலாசார மண்டபத்தில் பிரதேச சபை தவிசாளர் விமலநாதன் மதிமேனன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். ஆர். கு. றிப்கா கலந்து சிறப்பிக்க, சிறப்பு அதிதிகளாகப் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன், போரதீவுப்பற்று பிரதேச சபை உப தவிசாளர் த. கயசீலன், செயலாளர் சி. பகிரதன், பிரதேச சபை உறுப்பினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பரிசளிப்பு விழா நடைபெற்றது




மட்டக்களப்பு, ஜன. 01

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய 2024ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா மகிழடித்தீவு கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

2024ஆம் ஆண்டு உயர்தரத்தில் சித்திடைந்து பல்கலைகழகம் தெரிவான மாணவர்கள், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் 6ஏ சித்திக்கு மேல் பெற்ற மாணவர்கள், தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், விளையாட்டு போட்டி, தமிழ் மொழித்தினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, சித்திரப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி, புத்தாக்கப் போட்டி ஆகியவற்றில் மாகாண, தேசிய மட்டத்தில் சாதித்த மாணவர்கள், அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோர் பரிசில், பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டனர்.

மேலும் பொதுப்பரீட்சையில் கூடிய சாதனைகளை வெளிக்காட்டிய பாடசாலைகளுக்கும் பாராட்டு பத்திரம் வழங்கி வைக்கப்பட்டன.

வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சிவசங்கரி கங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எஸ். அருள்ராஜ், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் ந.தனஞ்சயன், மண்முனை தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் இ. திரேசகுமாரன், மண்முனை மேற்கு தவிசாளர் த.கோபாலபிள்ளை, வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வை.சி.சஜீவன், தே.உதயகரன், தி.யசோதரன், உதவிக்கல்விப் பணிப்பாளர்களான க.ரகுகரன், உ.விவேகானந்தன், எஸ். சக்திதாஸ், தீபதர்சன் கணக்காளர் வி.கணேசமூர்த்தி, கோட்டக்கல்விப் பணிப்பாளர் மூ.உதயகுமாரன் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# மட்டக்களப்பு மாநகர சபைமீது மதவாத சாயம் பூசுவதற்கு சதி

மட்டக்களப்பு, ஜன. 01

மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான சொத்துகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுள்ள சிலர், தமது சுயலாபத்துக்காக மதவாத செயல்பாடுகளைத் தூண்டிவிட்டு மாநகர சபையை சிக்கலுக்குள்ளாக்க முயற்சிக்கின்றனர் என்று மாநகர முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் கூட்டாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். அவர்கள் மேலும் கூறுகையில்,

மாநகர சபையில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காலத்தில், ஆணையாளர்களை பயன்படுத்தி சிலர் நீண்டகால குத்தகை அடிப்படையில் வர்த்தக நிலையங்களை பெற்றுள்ளனர். இது தொடர்பில் தற்போதுள்ள மக்கள் சபை சட்டப்படியான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில், அதனை முறியடிக்க சிலர் மதவாதத்தை பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக, தனியார் பேருந்து நிலையத்தின் மேல் தளத்தை நீண்டகால குத்தகைக்கு எடுத்துள்ள ஒருவர் சில இளைஞர்களைத் தூண்டிவிட்டு ஊடகங்கள் வாயிலாக மாநகர சபைக்கு எதிராகத் தவறான கருத்துகளைப் பரப்பி வருகின்றார்.

ஊழல் மற்றும் முறையற்ற குத்தகை முறைகளுக்கு எதிராக மாநகர சபை எடுக்கும் உறுதியான நடவடிக்கைகளை திசை திருப்பவே இத்தகைய மதவாதச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாநகர சபையினர் குற்றஞ்சாட்டினர். (ஐ)

# இரத்தினபுரி விபத்தில் ஐவருக்கு காயங்கள்!

இத்தினபுரி, ஜன. 01

இரத்தினபுரி, திரிவானகெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஐவர் காயமடைந்தனர் என்று இரத்தினபுரி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தினபுரியிலிருந்து எம்பிலிப்பிட்டி நோக்கிப் பயணித்த லொறி ஒன்று மொனராகலையிலிருந்து ஹொரணை நோக்கிப் பயணித்த வானுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் இரத்தினபுரி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

காணியை விடுவிக்கவேண்டும் என நாம் கடந்த மூன்று வருடங்களாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆனாலும் இதுவரை எந்தவிதமான முடிவுகளோ தீர்வுகளோ கிடைக்கவில்லை.

ஆனாலும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ். மாவட்ட உதவி அரச அதிபராக (காணி) முரளிதரன் இருந்தபோது காணிகள் தொடர்பில் துல்லியமான தரவுகளுடன் தீர்வுக்கான முயற்சி எடுக்கப்பட்டும், அது ஏதோ ஒரு விதத்தில் கைநழுவிப் போனது.

அதன் பின்னர் தற்போது இந்த முயற்சி மாவட்ட செயலர் பிரதீபனால் முன்னெடுக்கப்பட்டு இன்று (நேற்று) காணி உரிமையாளர்களான என்முடன் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது காணிகளின் உரிமம் மக்களுக்கானதென்பது உரிமையாளர்களின் உரிமங்களின் சான்றுகள் மூலம் நிரூபிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதையடுத்து அக்காணிகளின் விடுவிப்புக்கான பொறிமுறை குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது விகாரை இருக்கும் குறித்த நிலப்பரப்பு தவிர்ந்த ஏனைய காணிகளை விடுவிப்பதற்கான யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் விகாரைக்கு மேற்குப் புறமுள்ள காணிகளை மிக விரைவில் விடுவிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது.

அதன் பின்னர் மிகுதிக் காணிகள் 4 கட்டங்களாக விடுவிப்பதற்கும் குறித்த யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறிப்பாக விகாராதிபதி வாழிடம் உள்ளிட்ட ஏனைய பல கட்டடங்களை அகற்றி வேறிடத்துக்கு கொண்டு செல்லும் வகையியான செயற்பாடுகளுக்கான அவகாசம் கருதியே இந்த 4 கட்டங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் விகாரை அமைந்துள்ள காணி மூன்று தரப்பினருக்குரியதாக இருக்கின்றது. ஆனாலும் அந்த காணிக்கான மாற்றுக் காணி குறித்தோ, நட்டஈடு தொடர்பிலும் எந்த விதமான தீர்மானமோ யோசனையோ எடுக்கப்படவில்லை.

அத்துடன் இந்த முயற்சி ஒரு யோசனையாகவே இன்று தீர்மானிக்கப்பட்டு துறைசார் தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இது இறுதி முடிவாக அல்லாது யோசனையாகவே இருப்பதனால் நாம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஏற்கனவே தீர்மானித்திருந்த தையிட்டி போராட்டத்தை திட்டமிட்டபடி நடத்த தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு காணி உரிமையாகர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க தயாராக உள்ளோம்-என்றனர். (அ-05)

## அடுத்த...

போதிய தயார்ப்படுத்தல்கள், பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் இன்றி சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முயல்வதாக அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கல்வி நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வண. உலப்பனே சுமங்கல தேரர், புதிய பாடத்திட்டம் தொடர்பாக 90 வீதத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள் முறையான பயிற்சிகளை பெறவில்லை என தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கவலைகளை தீர்ப்பதற்கு பதிலாக, பாடசாலை விடுமுறைகளை அறிவித்து எதிர்ப்பை அடக்க அரசாங்கம் முயல்வதாகவும் அவர் கூறினார்.

இந்நிலை தொடர்ந்தால் நாடளாவிய தொழிற்சங்க போராட்டம் தவிர்க்க முடியாததாகும் என அவர் எச்சரித்தார்.

இதனிடையே, 16 ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து விளக்கம் பெற கல்வி அமைச்சுக்கு சென்றபோது, முன் அனுமதி இல்லையெனக் கூறி உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இதனால் அரசாங்கம் பிடிவாதமாக செயல்படுவதாக தொழிற்சங்கங்கள் குற்றம்சாட்டுகின்றன.

அதேவேளை, பாடசாலை நேரம், தினசரி பாட வேளைகள், புதிய பாடத்திட்டத் தொகுதிகள் விநியோகம் மற்றும் ஸ்மார்ட் போர்ட், இணைய வசதி போன்ற அடிப்படை வளங்கள் தொடர்பாக கடும் குழப்பம் நிலவுவதாக அதிபர் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## மாகாண...

ஜனவரி 6 - 9 ஆம் திகதி வரையான அமர்வுகளின் நிகழ்ச்சி நிரலும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ஜனவரி 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதம், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான பிரகடனம் தொடர்பான விவாதம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்த விசேட குழுவை நியமிப்பதற்கான பிரேரணை சமர்ப்பித்தல் போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஜனவரி 7 ஆம் திகதி புதன் கிழமை கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீட்டு விவாதம் விவாதம் இடம்பெறவுள்ளது.

அதனையடுத்து அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம் விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளது.

அத்தோடு, ஜனவரி 8 ஆம் திகதி வியாழக்கிழமை மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் (203 ஆம் அத்தியாயம்) வெளியிடப்பட்டுள்ள இரண்டு புதிய ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

அதனையடுத்து, ஜனவரி 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கடை மற்றும் அலுவலக ஊழியர்களின் ஊழியத்தையும், வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(அ)

## சகலரும்...

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“மிகப்பெரிய மறுசீரமைப்புச் செயல்முறையையும், மீளக் கட்டியெழுப்பும் பாரிய பணியையும் தோள் மேல் சுமந்த நாடென்ற வகையில் நாம் 2026 ஆம் ஆண்டு புத்தாண்டில் கால்களைப் பதிக்கின்றோம்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், கடந்த 2025 ஆம் ஆண்டு தேசிய அபிலாஷைகளை அடிப்படையாகக் கொண்ட நிலையான அபிவிருத்திக்காக அடித்தளமிடப்பட்ட ஆண்டாக அமைந்தது.

1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு மிகக் குறைந்த வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறையைப் பதிவு செய்தல், 2007 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டின் கூடுதலான அரச வருவாயை ஈட்டுதல், வரலாற்றில் முதல் முறையாக முதன்மை கணக்கு மிகையைப் பெற்றமை, பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி வருவாயை சுமார் 17 பில்லியன் டொலர்களாக அதிகரித்தமை, எமது நாட்டு வரலாற்றில் அரச வருவாய் இலக்குகளை விஞ்சும் ஒரே ஆண்டாக 2025 ஆம் ஆண்டை மாற்றியமை மற்றும் அண்மைக் காலத்தில் சுற்றுலா பயணிகள் அதிகளவில் நாட்டுக்கு வருகை தந்த வருடமாக பதிவானமை போன்றன 2025 ஆம் ஆண்டில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க பொருளாதார சாதனைகளாகும்.

இலங்கை மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த ஊழல் நிறைந்த அரசியல் முறைமைக்குப் பதிலாக பொதுமக்களுக்கு நேர்மையாக சேவை செய்யும் ஒரு சிறந்த அரசியல் கலாசாரத்தை நாட்டில் உருவாக்கவும், எதிர்காலச் சந்ததியினரைப் போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து விடுவிப்பதற்கான “முழு நாடுமே ஒன்றாக “ தேசிய செயற்பாட்டைப் போன்ற திட்டங்களைச் செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு இவை 2025 ஆம் ஆண்டு நாட்டின் அரசியல் மற்றும் சமூக மாற்றத்தில் ஒரு திருப்புமுனையான ஆண்டாகப் பதியப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் நாடு எதிர்கொண்ட மிகப் பெரிய இயற்கைப் பேரழிவின் சவாலை கடந்த ஆண்டு நாங்கள் ஒன்றாக எதிர்கொண்டோம்.

நமது மக்களிடையே உள்ள மனிதநேயப் பண்பானது எந்தப் பேரழிவினாலும் பறிக்க முடியாத ஒரு சிறந்த குணம் என்பதைத் தெளிவாக நிரூபித்ததோடு நாடு முழுவதும் உள்ள மக்கள் பாதிக்கப்பட்ட சகோதர மக்களின் துயரத்தில் கைகோர்த்தார்கள்.

இந்தச் சவாலை எதிர்கொள்வதில் எங்களுக்கு ஆதரவளித்த வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கும், மீளெழுச்சிக்கு நட்புறவின் பலத்தை வழங்கிய உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளுக்கும், அனர்த்த நிலையில் அயராது உழைத்த பொலிஸார் மற்றும் முப்படைகளுக்கும், இந்த நாட்டின் அரச உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் ஒன்றாக, இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

உலக வரலாற்றில் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு நாட்டையும் கட்டியெழுப்புவதில் அந்த மக்களின் இலட்சியமும் தைரியமும் பக்கபலமாக இருந்தது. நமது அன்பான பிரஜைகளின் அசைக்க முடியாத தைரியத்தின் பலனால், நாம் முன்பு இருந்ததை விட சிறந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப் முடியும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

புத்தாண்டு வருகை கடந்த ஆண்டின் அனுபவங்களை மீள்பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு அளிப்பதோடு, புத்தாண்டு தொடர்பில் சாதகமான மனப்பாங்குகளுடன் மீளத் திட்டமிடுவதற்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தில் அசைக்க முடியாத உறுதியுடனும் நம்பிக்கையுடனும் சகோதரத்துவத்துடன் கைகோர்க்க அனைவருக் கும் நான் அழைப்பு விடுகின்றேன்.

மலர்ந்த 2026 புத்தாண்டு உங்கள் அனைவரினதும் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வெற்றிகரமான புத்தாண்டாக அமைய வாழ்த்துகின்றேன்.” - என்றுள்ளது.(அ)

## ஊடக...

ஊடக சுதந்திரம் என்ற பெயரில் பொய்ச் செய்திகள், இனவெறி கருத்துகள் அல்லது சதி கோட்பாடுகளை பரப்ப அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை சில ஊடகங்கள் எடுத்துக்கொள்வதில் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு இல்லை என தெரிவித்த அமைச்சர், ஆனால் சட்டபூர்வ செயல்முறைகளுக்கு தடையாக அமையும் தவறான தகவல்களை பரப்புவது ஏற்றுக்கொள்ள முடியாதது என சுட்டிக்காட்டினார்.

எந்த ஊடக நிறுவனத்தின் அனுமதிப் பத்திரத்தையும் ரத்து செய்யுமாறு பொலிஸார் கோரவில்லை என்றும், எந்த ஊடகத்தையும் மௌனம் செய்யும் முயற்சியும் இல்லை என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். (அ)

## சர்வதேச...

விதிமுறைகளுக்கு உட்பட்ட ஆய்வுகூடத்தை அமைப்பதற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு கேட்டுள்ளார்.

மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு ஏற்ப உறுதி செய்வதற்கு ஒழுங்குமுறை கண்காணிப்பை வலுப்படுத்துவது நாட்டின் அவசர தேவையாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்காக மேம்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள், நவீன பகுப்பாய்வு தொழில்நுட்பங்கள் மற்றும் தர உறுதி அமைப்புகள் அவசியமாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## அரசமைப்பு...

ஜனாதிபதியின் கீழ் இயங்கும் நிறுவனம் அல்ல. அது சுயாதீன சபையாகும்.

எனவே, ஜனாதிபதியால் அனுப்படும் பெயருக்கு அச்சபை அங்கீகாரம் வழங்கவேண்டும் என்ற தொனியில் கருத்து வெளியிடும் ஆளுங்கட்சியினர் இதனை புரிந்துகொள்ள வேண்டும். ஊழல், மோசடிகளுக்கு எதிராக அதிகளவில் குரல் கொடுத்த கட்சிதான் ஜே.வி.பி. , அக்கட்சியின் ஆட்சியின்கீழ் கணக்காய்வாளர் நாயகம் இல்லாத நாடாக இலங்கை இன்று மாறியுள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் இன்றி பாராளுமன்றத்தில் கோப் மற்றும் கோபா குழு கூட்டங்களை நடத்த முடியாது. எனவே, எதிர்வரும் 6 ஆம் திகதிக்குள் கணக்காய்வாளர் நாயகம் நியமிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## நாகொடை...

செய்யப்பட்டு, களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைகக்கப்பட்டிருந்தவர் ஆவார்.

சிறையில் இருந்தபோது கடந்த 29 ஆம் திகதி சிறைக் கைதிகள் சிலரால் தாக்கப்பட்டமையினால் இவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிற்கு மத்தியில், களுத்துறை நாகொடை போதனா வைத்தியசாலையின் 14 ஆம் இலக்க விடுதியில் காலில் விலங்கிடப்பட்டு தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, நேற்று காலை 6.15 மணியளவில் இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் ரிவோல்வர் ரகத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு, வைத்தியசாலை மதிலின் மேலால் குதித்துத் தப்பிச் சென்றுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளை களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் தடயவியல் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## நீதித்துறையில்...

காணப்படுவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

திறமையின் அடிப்படையில் சிரேஷ்டத்துவத்தைப் புறக்கணிப்பதென்றால், அதற்கான தெளிவான அல்லது வெளிப்படையான வழிகாட்டல்கள் தற்போது இல்லை என்றும் குறித்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நீதித்துறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும், நீதி நிர்வாகம் பாரபட்சமற்ற முறையில் நடைபெறுவதை உறுதி செய்வதற்கும் வெளிப்படையான பதவி உயர்வு முறை மிகவும் அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் திறமையை மதிப்பீடு செய்வதற்கான முறையான மற்றும் வெளிப்படையான வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்படும் வரை, சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையிலேயே பதவி உயர்வுகளை வழங்குமாறு சங்கம் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் அரசியலமைப்புச் சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய மற்றும் செயலாளர் சதுர கல்ஹேன ஆகியோரின் கையொப்பத்துடன் இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பேரிடரால் பாதிக்கப்பட்ட 3 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இன்னமும் முகாம்களில்

கொழும்பு, ஜன. 01

**டித்வா பேரிடரால் பாதிக்கப்பட்ட மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்தும் முகாம்கள், உறவினர் அல்லது நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.

76 ஆயிரத்து 801 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 67 ஆயிரத்து 700 நபர்கள் உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். 10 ஆயிரத்து 340 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 175 நபர்கள் 358 முகாம்களில் தங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

638 பேர் உயிரிழந்தனர் 175 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பி.எஸ்.டி. ஹேரத் தெரிவித்துள்ளார். (ஐ)

## மரக்கறிகள் இறக்குமதியை ஒருபோதும் அனுமதிக்கோம்

கொழும்பு, ஜன. 01

விசேட அனுமதி தவிர எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காதென வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் அரசாங்கம் எடுக்கவில்லை. விமான சேவை போன்ற சில நிறுவனங்களுக்காக குளிரூட்டப்பட்ட மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியைத் தவிர வேறு எந்தவொரு தரப்பினருக்கும் மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களை அரசாங்கம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மரக்கறிகளை இறக்குமதி செய்வதாக தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பின் தலைவர் அனுராத தென்னகோன் குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் நாட்டின் வடக்கு முதல் தெற்குவரையான விவசாயக் காணிகள் பாதிக்கப்பட்டன. இருப்பினும் வயல்கள் உள்ளிட்ட விவசாயக் காணிகளில் மீண்டும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலை உள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

## தரம் 6 ஆங்கில பாட புத்தகத்தில் பொருத்தமற்ற இணையத்தளம்

### விநியோகம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 01

தேசிய கல்வி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 6 ஆம் தர ஆங்கில மொழிப் பாடத்திற்கான கற்றல் தொகுதியில் பொருத்தமற்ற இணையத்தளமொன்றின் பெயர் உள்ளடக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், குறித்த தகவல் உண்மை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த கற்றல் தொகுதியை விநியோகிக்கும் பணிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தவறு எவ்வாறு இடம்பெற்றது என்பது குறித்து தேசிய கல்வி நிறுவனம் உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொலிஸ் அதிகாரி டிப்பர் மோதி பலி

கொழும்பு, ஜன. 01

விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த காவல்துறை அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று நவகமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - கடுவலை - போமிரிய பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் கடுவலை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த 40 வயதுடைய அதிகாரி ஒருவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரி நீதிமன்றப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்துள்ளார். கடமையை முடித்துவிட்டு நண்பர் ஒருவரை அவரின் வீட்டில் விட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோது, டிப்பர் ரக வாகனம் மோதி படுகாயமடைந்தார்.

விபத்தின் பின்னர் நவகமுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்தநிலையிலேயே உயிரிழந்தார்.

## டித்வா பாதிப்பில் இருந்து மீள ரூ. 25 இலட்சம் வரை கடனுதவி

கொழும்பு, ஜன. 01

"டித்வா" சூறாவளியால் பாதிக்கப்பட்ட தொழில்முனைவோருக்கு வழங்கப்படும் நிதி நிவாரணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நடுத்தர மற்றும் பெருமளவிலான வர்த்தக உரிமையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்படி, தகுதியுள்ள வர்த்தக உரிமையாளர்கள் 25 இலட்சம் ரூபாய் வரை கடன் பெற விண்ணப்பிக்கலாம். இந்தக் கடனுக்கான வருடாந்த வட்டி வீதம் வெறும் 3 வீதம் மட்டுமே.

அத்துடன், கடன் பெற்ற பிறகு முதல் 6 மாதங்களுக்கு தவணை செலுத்தவேண்டிய அவசியமில்லை. சலுகைக் காலம் உட்பட மொத்தம் 3 ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும்.

அனுமதி பெற்ற வணிக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகள் ஊடாக இந்த கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியன இதில் முன்னின்று செயல்படுகின்றன.

மேலும், இந்தத் திட்டத்துக்காக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 3 வருடங்கள் கடந்தால் மட்டுமே அரசாங்கம் பற்றி கூற முடியும்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஜன. 01

அரசாங்கம் தொடர்பில் ஒரு வருடத்தில் அதன் நன்மை, தீமைகள் தொடர்பில் கருத்து கூறுவது உசிதமானதல்ல. புதிய அரசாங்கம் பதவியேற்று மூன்று வருடங்களின் பின்னர்தான் நன்மை, தீமைகள் தொடர்பில் கருத்து கூற முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஓர் அரசாங்கம் ஒரு வருடத்திற்குள் எதுவும் பெரிதாக சாதித்து விட முடியாது. மூன்று வருடங்களின் பின்னரே எந்த பக்கம் போகிறது என்று தெரியும்.

பிரதேச சபைகளின் பாதீடு வாக்கெடுப்பில் உறுப்பினர்களின் நிலைப்பாடு மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கலாம். அதை அரசாங்கம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

உள்ளூராட்சி சட்டத்தின் கீழ், இதுபோன்ற சூழ்நிலைகளை ஜனநாயக ரீதியாக வாக்கெடுப்பு மூலம் தீர்க்க முடியும். இதுபோன்ற சூழ்நிலையில், எந்தவொரு நபருக்கும் ஜனநாயக ரீதியாக தங்கள் வாக்கைப் பயன்படுத்த சுதந்திரம் உள்ளது என்றும் கொழும்பில் கடந்த திங்கட்கிழமை பங்கேற்ற நிகழ்வில் அவர் கூறியுள்ளார். (ஐ)

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, ஜன. 01

லங்கா சதொச நிறுவனத்துக்கு சொந்தமான லொறி உட்பட பல வாகனங்களை தவறாக பயன்படுத்தி அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய 5 பொலிஸ் குழுக்கள் களத்தில் இறங்கியுள்ளன.

எனினும், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தங்கியுள்ள இடம் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை.

லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி உட்பட பல வாகனங்களை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோ பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட ஜொஹான் பெர்னாண்டோவை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## துப்பாக்கி உரிமத்தை புதுப்பிக்க அவகாசம்!

கொழும்பு, ஜன. 01

துப்பாக்கிகளுக்கான உரிமங்களை புதுப்பிப்பதற்கான கால அவகாசம், நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த கால அவகாசம் ஒரு மாதத்தால் நீடிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளை கருத்தில்கொண்டு, பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை குறைக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, துப்பாக்கிக்கான உரிமத்தை வைத்துள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதி வரை அதனை புதுப்பிக்க முடியுமென பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## கொழும்பு மாநகர சபையின் பாதீடு நேற்று நிறைவேறியது

கொழும்பு, ஜன. 01

கொழும்பு மாநகர சபையில் ஆளும் தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான பாதீடு கடும் இழுபறிக்கு மத்தியில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இரண்டாம் சுற்று வாக்கெடுப்பின் முடிவில் பாதீட்டுக்கு ஆதரவாக 58 வாக்குகளும், எதிராக 56 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன்படி, 2 வாக்குகள் வித்தியாசத்தில் பாதீடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 22ஆம் திகதி கொழும்பு மாநகர முதல்வர் வ்ராய் கெலீ பல்தாசாரால் சமர்ப்பிக்கப்பட்ட பாதீடு தோல்வியடைந்திருந்தது. அதன்போது, ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், நேற்று மீண்டும் பாதீடு முன்வைக்கப்பட்டு மறு வாக்கெடுப்பு நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்திக்கு சபையில் தனிப்பெரும்பான்மை இல்லாத போதிலும் ஏனைய சுயேட்சை குழுக்கள் மற்றும் பிற கட்சிகளின் ஆதரவுடன் பாதீடு நிறைவேற்றப்பட்டது.

இந்த வெற்றியின் மூலம் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியை தேசிய மக்கள் சக்தி உறுதிப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.